08.01.2024 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண். 178 /2017 ) திரு.தங்கவேல்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> –

நான் எங்கு குடியிருக்கிறேன் என்றால் ராஜாபுதுக்குடி கிராமத்தில் குடியிருக்கிறேன். எந்த வருடத்திலிருந்து ராஜாபுதுக்குடியில் குடியிருந்து வருகிறேன் என்றால் நான் பிறந்தது முதல் அங்கு தான் குடியிருந்து வருகிறேன்.1978 ல் நிலம் வாங்கியதிலிருந்து அங்குதான் வசித்துவருகிறேன். ராஜாபுதுக்குடி கிராமத்தின் சர்வே எண்.46/4 ல் 1978 ஆம்ஆண்டு வாதியின் தாத்தா மாடனிடம் 16 செண்டு கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். நான் கியைரம் பெற்ற சொத்தின் மேற்கு பக்கம் 10 செண்டு நிலத்தை எனது மகளுக்கு 30.06.2011 ஆம் ஆண்டு கிரையம் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். அந்த 10 செண்டு நிலத்தில் எனது மகள் வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். மீதமுள்ள 6 செண்டு நிலம் எனது அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் 6 செண்டு மற்றும் வழக்கு சொத்தும் எனது அனுபவத்தில் தான் இருந்து வருகிறது. எனக்கு கிரையம் மூலம் பாத்தியப்பட்ட 6 செண்டுக்கு தென்பக்கம் தான் தாவாச்சொத்து உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 நான் கிரையம் பெற்ற பத்திரம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் சொத்து விவரத்தில் கயத்தார் சப்ரி அயன்புஞ்சை இராஜாபுதுக்குடி கிராமம் அயன் புஞ்சை சர்வே எண்.46 நிர் 4 லட்டர் ஹெக்டேர் 0.43.05 ஏக்கர் 1 செண்டு 6 ல் வடமேல்மூலையில் செண்டு 16 க்கு மால். என் கையிருப்பு நிலத்திற்கு மேற்கும், வடக்கும், மதுரை ரோட்டிற்கும் கிழக்கு, சுடலையாண்டி நிலத்திற்கும் தெற்கு என்று மால் விவரத்தில் கண்டுள்ளது என்றால் சரிதான். 30.06.2017 ல் எனது மகளுக்கு கிரையம் கொடுத்த ஆவணம் தான் பி.வா.சா.ஆ.5 என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 ஆவணத்தின் முன் ஆவணமாக 04.11.1978 ம்தேதி மாடனிடம் கிரையம் பெற்ற பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை முன் ஆவணமாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 ல் செண்டு 16 ல் மேல்பக்கம் செண்டு10 க்கு மால்.(தற்சமயம் யூ.டி.ஆர்.படி அயன்புஞ்சை சர்வே எண்.46/4 ஏ நம்பர் ஹெக்டேர் 0.08.0)தேசிய நெடுஞ்சாலைக்கு கிழக்கு, என்கையிருப்பு வீடு, மனை

வகையறாக்களுக்கு மேற்கு, பழனி காலிமனைக்கும் வடக்கு,சுடலை காலிமனைக்கும் தெற்கு என்று காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பழனி காலிமனை என்று குறிப்பிடப்பட்டுள்ள பழனி வாதியின் அப்பா என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலம் பாரா 4ல்' வாதியின் தகப்பனாரை பெற்ற மாடன் என்பவர் எனக்கு கிரையம் செய்து கொடுத்த 16 செண்டு நிலம் நீக்கி மீதமுள்ள பகுதி மேற்படி மாடன் வசம் கையிருப்பாக இருந்து அதை வாரீசு நிலைமையில் அவரது மகன் பழனி அனுபவம் செய்து வந்தார்' என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வழக்கின் வாதி அளித்த சாட்சியத்தை எனது தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்வதற்கு எனது வழக்கறிஞருக்கு நான் தான் தகவல் கூறினேன் என்றால் ஆமாம். தாவாச்சொத்தை நான் பத்திரம் மூலம் உரிமை கோருகிறேனா அல்லது பட்டா மூலம் உரிமைகோருகிறேனா என்றால் பத்திரம் 16 செண்டு பாத்தியம் மீதமுள்ள தாவா 3 செண்டு எனது அனுபவத்தில் இருந்து வருகிறது. வழக்கு சொத்தில் எனக்கு உரிமையும் கிடையாது என்றாலும் காலிசுவாதீனம் வாதி வசம் நான் ஒப்படைக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. தாவா இடத்தில் 2017 ஆம்ஆண்டு ஆழ்துளை கிணறு அமைத்தேன் என்றால் தவறு.1981ல் ஆழ்துளை கிணறு தாவாச்சொத்தில் போட்டேன். நான் 1981ல் ஆய்துளை கிணறு அமைத்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
08.01.2024.